# வேதாகமத்தில் உள்ள பல்வேறு வகைகளிலான இலக்கியங்களில் உள்ள வசனப் பகுதிகளுக்கு விளக்கம் அளித்தல்

வேதவசனத்தின் எந்த ஒரு வசனப்பகுதிக்கும் நாம் விளக்கம் அளிக்கும்போது, அதன் “பெரிய சந்தர்ப்பப்பொருளில்” அதைப் புரிந்துகொள்ள நாம் நாட வேண்டும். அது எந்த வகையிலான இலக்கியத்தைச் சேர்ந்ததாக உள்ளது என்பது “பெரிய சந்தர்ப்பப்பொருளின்” ஒரு பகுதியாக உள்ளது. வேதாகமத்தில் பல்வேறு வகையான இலக்கியங்கள் அடங்கியுள்ளன (கீழே உள்ள அட்டவணையைக் காணவும்), மற்றும் *வெவ்வேறு வகையிலான வேதாகமப் பாடங்கள் வெவ்வேறு வகையில் விளக்கப்படுத்தப்பட வேண்டும்.* எடுத்துக்காட்டாக, நாம் சங்கீதப் புத்தகத்திற்கு, நியாயப்பிரமாணத்தின் புத்தகங்களுக்கு விளக்கம் அளிப்பது போல விளக்கம் அளிக்க இயலாது.

இந்தக் காரணத்தினால், பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் காணப்படும் இலக்கிய வகை ஒவ்வொன்றையும் நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. வேதாகமத்தில் உள்ள இலக்கியத்தின் பல்வேறு வகைகளுடைய பண்புகள் பற்றிய ஒரு படிப்பானது, அவை ஒவ்வொன்றிற்கும் நாம் நடைமுறைப்படுத்த வேண்டிய “விதிகளை” கண்டறிய நமக்கு உதவும். எடுத்துக்காட்டாக, வரலாற்றுப் பாடங்களுக்கு விளக்கம் அளிப்பதற்கான “விதிகள்” தீர்க்கதரிசனப் புத்தகங்களுக்கு விளக்கம் அளிப்பதற்கான விதிகளில் இருந்து மாறுபடும் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

பின்வரும் பாடங்கள், வேதாகமத்தில் காணப்படும் எட்டுவகையான இலக்கியங்கள் ஒவ்வொன்றையும் (மற்றும் அந்த ஒவ்வொரு வகையிலும் உள்ள புத்தகங்களையும்) அறிமுகப்படுத்துகின்றன, மற்றும் அவற்றிற்கு விளக்கம் அளித்தல் பற்றிய ஆலோசனைகளையும் நமக்குக் கொடுக்கின்றன. பாடத்தின் அளவு திணறச் செய்வதாகக் காணப்படலாம், ஆயினும் இந்தப் படிப்பு மதிப்பு மிக்கது என்று நிரூபிக்கப் படவேண்டும். வேதாகமத்தின் பல்வேறு பகுதிகள் பற்றிய பொது அறிவானது நமக்கு ஒரு விசாலமான பின்னணியை அளிக்கும், அது வேதாகமத்தின் எந்தப் புத்தகத்திலும் உள்ள எந்த ஒரு வசனப்பகுதியையும் இன்னும் நாம் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் ஆக்கும். மேலும் இந்தப் படிப்பை, குறிப்பிட்ட வேதவசனப் பகுதிகளுக்கு விளக்கம் அளிக்க உதவுவதற்கு, எதிர்காலக் குறிப்பிற்காகப் பாதுகாத்து வைக்கப்படவும் முடியும்.

## பழைய ஏற்பாட்டு வகைப்பாடுகள்

| நியாயப்பிரமாணம் (5) | வரலாறு (12) | பாடல் (5) | தீர்க்கதரிசனம் (17) | |
|---|---|---|---|---|
| ஆதியாகமம் | யோசுவா | யோபு | ஏசாயா | யோனா |
| யாத்திராகமம் | நியாயாதிபதிகள் | சங்கீதம் | எரேமியா | மீகா |
| லேவியராகமம் | ரூத் | நீதிமொழிகள் | புலம்பல் | நாகூம் |
| எண்ணாகமம் | 1, 2 சாமுவேல் | பிரசங்கி | எசேக்கியேல் | ஆபகூக் |
| உபாகமம் | 1, 2 இராஜாக்கள் | உன்னதப்பாட்டு | தானியேல் | செப்பனியா |
| | 1, 2 நாளாகமம் | | ஓசியா | ஆகாய் |
| | எஸ்றா | | யோவேல் | சகரியா |
| | நெகேமியா | | ஆமோஸ் | மல்கியா |
| | எஸ்தர் | | ஒபதியா | |

| புதிய ஏற்பாட்டு வகைப்பாடுகள் | | | |
|---|---|---|---|
| **இயேசுவின் வரலாறு (4)** | **சபையின் வரலாறு (1)** | **நிருபங்கள் (21)** | **தீர்க்கதரிசனம் (1)** |
| மத்தேயு<br>மாற்கு<br>லூக்கா<br>யோவான் | அப்போஸ்தலரின் நடபடிகள் | ரோமர்<br>1, 2 கொரிந்தியர்<br>கலாத்தியர்<br>எபேசியர்<br>பிலிப்பியர்<br>கொலோசெயர்<br>1, 2 தெசலோனிக்கேயர்<br>1, 2 தீமோத்தேயு<br>தீத்து<br>பிலேமோன்<br>எபிரெயர்<br>யாக்கோபு<br>1, 2 பேதுரு<br>1, 2, 3 யோவான்<br>யூதா | வெளிப்படுத்தின விசேஷம் |